கள். ஒரு தவறு நடந்திருக்கிறது என்பதை அப்படிக் குறிப்பிட்டிருக் கிறார்கள். இருந்தாலும் அதைப்பற்றி நாம் இங்கே பேசிவிட்ட காரணத் தால் அவர்களே, அதைத் திருத்திக் கொள்வார்கள். நண்பர் 'கும்ப கோணம்' என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதில் வந்திருப்பது "பெரிய கும்பகோணம்" என்பதாகும். ஆகவே அது இவர்களைப் பாதிக்காது என்று கருதுகிறேன்.

Nehru Memorial Fund

* 296 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount collected districtwise towards "Nehru Memorial Fund" during 1963–64;

(*b*) the amount contributed to the Central Fund; and

(*c*) the purposes for which the balance was spent?

நேரு நிதி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1963–64-ல் நேரு நிதி மாவட்ட வாரியாக எவ்வளவு வசூல் செய்யப்பட்டது?

(இ) மத்திய நிதிக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

(உ) மீதி பணம் என்ன வகையில் செலவு செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி. தலைவர் அவர்களே, (அ) 1964 நவம்பர் மாதத்தில் நேரு நிதி வசூல் செய்யப்பட்டது. 1968 அக்டோபர் 25 தேதி வரையில், ரூ. 38,46,276·83 வசூல் செய்யப் பட்டது. மாவட்ட வாரியாக விவரம் தற்போதில்லை.

(இ) மத்திய நிதிக்கு இதிலிருந்து ரூ. 37,26,218·71 கொடுக்கப் பட்டது.

(உ) தற்போது (30—1—1969-ல்) மீதி ரூ. 1,22,458·82 ஸ்டேட் பாங்கில் டெப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

Burglaries in Tambaram area

* 297 *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of burglaries that took place in Tambaram and its surroundings from 1st January 1968 to 31st August 1968;

(*b*) the number of persons arrested so far in this connection ; and

(*c*) the number of persons against whom cases were filed ?

தாம்பரம் வட்டாரத்தில் நடந்த கொள்ளைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி வரை தாம்பரத்திலும், தாம்பரம் வட்டாரத்திலும் எத்தனை கொள்ளைகள் நடந்தன ?

(இ) இது சம்பந்தமாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் ?

31st March 1969]

(உ) எத்தனை பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 1968-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி வரை தாம்பரத்திலும் தாம்பரம் வட்டாரத்திலும் 20 கொள்ளைகள் நடந்தன.

(இ) இது சம்பந்தமாக எட்டு பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

(உ) எட்டுப்பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

THIRU S. JAYARAMA REDDIAR : With the permission of the Chair, I would like to put a supplementary. . .

MR. CHAIRMAN : On this question?

THIRU S. JAYARAMA REDDIAR : Sir, I want to bring to the notice of the Hon. the Chief Minister certain things in Ramanathapuram district.

MR. CHAIRMAN : That may be done later on.

Shiv Sena

* 298 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government of Tamil Nadu have sent any note to the Government of India regarding the sufferings undergone by the Tamilians in Bombay as a result of the activities of Shiv Sena ; and

(*b*) if so, the reply received from them ?

சிவசேனை.

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பம்பாயிலுள்ள சிவசேனையினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட துயரங் கள் குறித்து இந்த அரசு, மத்திய அரசிற்கு ஏதேனும் குறிப்பு அனுப் பியதா ?

(இ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட பதில் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, (அ) பம்பா யிலுள்ள சிவசேனையினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட துயரங்கள் குறித்து இந்த அரசு, மத்திய அரசுக்கு குறிப்புகள் அனுப்பியிருக்கின்றன. இது குறித்து மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(இ) இது குறித்து தமிழ்நாடு அரசுடனும் தமிழக மக்களுடனும் சேர்ந்து தாமும் கவலையுறுவதாகவும், பம்பாய் மாநகரில் மட்டுமல்லாமல் மகாராஷ்டிர மாநிலம் முழுவதும் உள்ள இந்திய மக்கள் அனைவரும் அவர்கள் எப்பகுதியிலிருந்து வந்தவர்களாயினும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும் வாழ்வதற்கும் பணியாற்றுவதற்கும் வகை செய்ய மகா ராஷ்டிர அரசு தன்னால் இயன்றதை யெல்லாம் செய்து வருகின்றது. இனியும் அவ்வாறே செயலாற்றும் என்றும் மத்திய உள்துறை அமைச்சர் வரைந்துள்ளார்.